மதிமுக நிர்வாகக் குழு கூட்டம் மே 13–க்கு மாற்றம்

சென்னை, மே 8: மதிமுக நிர்வாகக் குழு கூட்டம் சென்னை எழும்பூரில் உள்ள தாயகத்தில் வரும் மே 13–ஆம் தேதி நடைபெறும் என அக்கட்சி பொதுச் செயலர் வைகோ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

மதிமுக நிர்வாகக் குழு கூட்டம் மே 16–ஆம் தேதி நடைபெறும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக, மே 13–ஆம் தேதி (புதன்கிழமை) காலை 10 மணிக்கு கட்சியின் அவைத் தலைவர் ஆடிட்டர் ஆ.அர்ஜுனராஜ் தலைமையில் எழும்பூரில் உள்ள மதிமுக தலைமை அலுவலகமான தாயகத்தில் நடைபெறும் என அதில் தெரிவித்துள்ளார்.

முட்டை விலை ரூ. 5.40-ஆக நீடிப்பு

நாமக்கல், மே 8: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை மாற்றமின்றி தொடர்ந்து ரூ. 5.40-ஆக நீடிக்கிறது.

தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் நாமக்கல் மண்டல ஆலோசனைக் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில், கோழிப் பண்ணையாளர்களிடம் முட்டை விலை மாற்றம் செய்வது தொடர்பான கருத்து கேட்டறியப்பட்டது. பிற மண்டலங்களில் விலையில் மாற்றம் ஏதும் இல்லாத நிலையில், இங்கும் தற்போதைக்கு மாற்றம் வேண்டாம் என தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை மாற்றமின்றி ரூ. 5.40-ஆக தொடரும் என தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவால் அறிவிக்கப்பட்டது.

பல்லடத்தில் நடைபெற்ற தேசிய ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கறிக்கோழி விலை ரூ. 124-ஆகவும், முட்டைக் கோழி விலை ரூ. 110-ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது.

கோடை கால தீ தடுப்பு நடவடிக்கைகள்: மருத்துவமனைகளுக்கு அறிவுறுத்தல்

சென்னை, மே 8: தமிழகத்தில் மருத்துவமனைகள், கிளினிக்குகளில் கோடை காலத்தில் தீ விபத்துகள் ஏற்படாமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மக்கள் நல்வாழ்வுத் துறை அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து துறைசார் அதிகாரிகள் கூறியதாவது:

கோடை காலத்தில் வெப்ப நிலை அதிகரித்து வருவதால் அத்தகைய நேரங்களில் மருத்துவமனைகளில் தீ விபத்துகள் நேரிட வாய்ப்புள்ளது. அதனைத் தவிர்க்கும் பொருட்டு சில முக்கிய நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியம்.

பேரிடர் மேலாண்மைத் துறையுடன் இணைந்து சுகாதாரத் துறையினர் அந்தப் பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, மருத்துவமனையில் தீயணைப்பு சாதனங்கள், எச்சரிக்கை கருவிகள், புகை கண்டறியும் சாதனங்கள் உள்ளிட்டவை முறையாக செயல்படுகின்றனவா என்பதை ஆய்வு செய்ய வேண்டும்.

சீரற்ற மின் அழுத்தத்தை சரி செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பது முக்கியம். தீவிர சிகிச்சைப் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு உள்பட அனைத்து இடங்களில் மின் அழுத்தம் சீராக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

மருத்துவமனை கட்டமைப்பானது தீ விபத்துகள் நேரிடாத வகையில் பாதுகாப்பாக உள்ளது என்பதை உறுதி செய்யும் வகையில் தீயணைப்பு துறையிடம் தடையில்லா சான்றை பெற வேண்டும்.

ஒருவேளை விபத்து நேரிட்டால் அதனை எதிர்கொள்வதற்கும், தற்காத்துக் கொள்வதற்குமான ஒத்திகை பயிற்சிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

அதேபோன்று நோயாளிகள், பணியாளர்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கான வழிமுறைகளையும் வகுக்க வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

கடை ஊழியர் இருவருக்கு கத்திக்குத்து; மூவர் கைது

நாகப்பட்டினம், மே 8: நாகை மாவட்டம், செருதூர் எல்லையம்மன் கோயில் தெருவைச் சேர்ந்தவர் அகிலன் (19). இவர் வேளாங்கண்ணி கடற்கரை சாலையில் தொப்பிகள் விற்கும் கடையில் பணிபுரிந்து வருகிறார். வியாழக்கிழமை இரவு கேரள மாநிலம், கொல்லம் மாவட்டம் பந்தளபுரத்தைச் சேர்ந்த செபிக் (29), அகில் (27), சம்னாஸ் (26) ஆகிய மூவரும் கடை மூடும் நேரத்தில் வந்து தொப்பி கேட்டுள்ளனர். அப்போது தொப்பியின் விலை குறித்து, அகிலனுக்கும், கேரளத்தைச் சேர்ந்த மூவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது.

இதில் ஆத்திரமடைந்த சம்னாஸ் (26), தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் அகிலனை குத்தியுள்ளார். அப்போது அருகில் இருந்த, நாகை புதிய ஆர்ச் தெருவை சேர்ந்த விநாயகமூர்த்தி (32) தடுக்க முயன்றபோது அவரையும் கத்தியால் குத்தியுள்ளார். இதுதொடர்பான புகாரின்பேரில், வேளாங்கண்ணி போலீஸார் வழக்குப் பதிவு செய்து, கேரளத்தைச் சேர்ந்த செபிக், அகில் மற்றும் வேளாங்கண்ணி செட்டி தெரு பகுதியை சேர்ந்த ஆல்வின் (33) ஆகியோரை கைதுசெய்தனர்.

பொது அறிவிப்பு

இதன் மூலம் பொது மக்களுக்கு பரவலாக அறிவிப்பது என்னவென்றால் மொத்தப் பரப்பளவு **21.84 ஏக்கர்** அல்லது தோராயமாக அந்த அளவில் கொண்டவையும், கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள சர்வே எண்களில் அமையப்பெற்றுள்ளதும், தமிழ்நாடு, கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், சுண்டக்காமுத்தூர் கிராமம், மதுக்கரை துணைப் பதிவு மாவட்டம் மற்றும் கோயம்புத்தூர் பதிவு மாவட்டம் மற்றும் பேரூர் செட்டிபாளையம் கிராமம், பேரூர் வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு இணை துணைப் பதிவு மாவட்டம் மற்றும் கோயம்புத்தூர் பதிவு மாவட்டம் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ளதுமான புல எண்கள் மீது (**"அட்டவணை சொத்து"**) ஈடுகாப்பு (Security) ஏற்படுத்துவதற்கு எமது கட்சிக்காரர் அல்லது அவரது நியமனதாரர் உத்தேசித்துள்ளார்.

வ. எண்	புளாட் எண்	புல எண்கள்	பரப்பளவு (ஏக்கர்)	நில உரிமையாளர் பெயர்
		சுண்டக்காமுத்தூர் கிராமம்		
1.	Owner Use-1	263/3	2.51	Rakindo Kovai Township (P) Ltd (formerly Blue Mountain Business Park (P) Ltd)
2.	Owner Use-2	261/1C	0.46	
3.	Owner Use-3	243/2	0.60	
		பேரூர் செட்டிபாளையம் கிராமம்		
4.	Owner Use-17	213/1	0.92	Rakindo Kovai Township (P) Ltd (formerly Nilgiri Communications (P) Ltd)
5.	Owner Use-18	236/2C, 236/3D, 237/2B	1.84	Rakindo Kovai Township (P) Ltd (formerly Nilgiri Communications (P) Ltd, Blue Mountain Shopping Malls (P) Ltd) and Amaresh Holdings (P) Ltd.
6.	Owner Use-21	236/1, 236/2A	0.49	Rakindo Kovai Township (P) Ltd (formerly Blue Mountain Shopping Malls (P) Ltd) and Vimala Real Estates (P) Ltd.
7.	Owner Use-22	235, 236/1	4.22	Rakindo Kovai Township (P) Ltd (formerly Nilgiri Shopping Malls (P) Ltd) and Vimala Real Estates (P) Ltd.
8.	Owner Use-27	230, 231/3A, 296/1A1, 296/1B1, 296/1B2, 296/1C1	4.22	Rakindo Kovai Township (P) Ltd (formerly Siruvani Electronics (P) Ltd)
9.	Owner Use-28	296/1A3, 296/1B4, 296/1B5, 296/1C3	0.37	
10.	Owner Use-32	295/1, 295/2	0.45	Rakindo Kovai Township (P) Ltd (formerly Siruvani Electronics (P) Ltd) and Amaresh Holdings (P) Ltd.
11.	Owner Use-39	294	0.82	Rakindo Kovai Township (P) Ltd (formerly Siruvani Hardware Park (P) Ltd)
12.	Future Development	210/1A	2.40	Rakindo Kovai Township (P) Ltd (formerly Nilgiri Communications (P) Ltd)
13.		210/2A1	0.51	
14.	Future Development	211/2A1A	0.80	Amaresh Holdings (P) Ltd.
15.		211/2A2A1	0.11	
16.	Future Development	211/2A2B1	0.10	Rakindo Kovai Township (P) Ltd (formerly Nilgiri Communications (P) Ltd) and Amaresh Holdings (P) Ltd.
17.	Future Development	211/10A	1.02	Rakindo Kovai Township (P) Ltd (formerly Nilgiri Communications (P) Ltd)
		மொத்தம்	21.84	

இந்த அட்டவணை சொத்து மீது அல்லது அதன் ஏதேனும் பகுதி(கள்) மீது விற்பனை, பரிமாற்றம், குத்தகை, உரிமம், செட்டில்மெண்ட், விடுவிப்பு, அடமானம், வாரிசு, அன்பளிப்பு, பொறுப்பு, ஈடுகாப்பு, பராமரிப்பு, வழிவகைப் பங்கு, அறக்கட்டளை, உடைமை அல்லது வேறு எவ்வித வழியிலேனும் சட்டப்படி செல்லுபடியாகும் உரிமை, உரிமம் அல்லது நலன்களை கொண்டுள்ள அல்லது உரிமை கோருகின்ற எவரேனும் நபர் அல்லது நிறுவனம், அல்லது அட்டவணை சொத்து சம்பந்தமாக ஏதேனும் கோரிக்கை அல்லது தகராறு இருந்தால், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து **15 (பதினைந்து) நாட்களுக்குள்** சட்டப்படி செல்லுபடியாகும் ஆவண நிரூபணங்களுடன் கீழ்க்கண்ட கையொப்பமிட்டவர்களுக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அதன் பின்னர் பெறப்படும் எவ்வித கோரிக்கைகள் அல்லது ஆட்சேபனைகளும் கைவிடப்பட்டதாக / விலக்கிக்கொண்டதாக கண்டிப்பாக கருதப்படும் மற்றும் எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளப்படாது.

ஒம்/-
ஷர்துல் அமர்சந்த் மங்கள்தாஸ் & கோ.
ஆர்த்தி லட்சுமிநாராயணன் (பங்குதாரர்),
பரமகுரு C M (முதன்மை அசோசியேட்), வழக்கறிஞர்கள் & வழக்குரைஞர்கள்
எண்.87/48, 2வது தளம், ASV சேமியர்ஸ் சதுக்கம்,
சேமியர்ஸ் சாலை, R.A.புரம், சென்னை - 600028, தமிழ்நாடு.

தமிழ்நாடு அரசு - ஈரோடு மாவட்டம்
எலத்தூர் பேரூராட்சி
தூய்மை இந்தியா திட்டம் 2.0 - அறிவிப்பு
திறந்தவெளி பகுதிகளை கழிப்பிடமாக பயன்படுத்தினால் அபராதம்

ந.க.எண்.68/2026 நாள்.08.05.2026

ஈரோடு மாவட்டம்-எலத்தூர் பேரூராட்சிக்கு உட்பட்ட 15 வார்டு பகுதிகளில் திறந்தவெளி பகுதிகளை கழிப்பிடமாக பயன்படுத்த கூடாது என்று விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் திறந்தவெளி பகுதிகளை கழிப்பிடமாக பயன்படுத்தினால் சுகாதார சீர்கேடு ஏற்படுத்துவதோடு பல்வேறு தொற்று நோய்கள் பரவ வாய்ப்புள்ளது. அதனால் பொதுமக்கள் சமுதாய கழிப்பிடத்தையோ, பொது கழிப்பிடத்தையோ தனி நபர் கழிப்பிடத்தை மட்டுமே பயன்படுத்த வேண்டும் இதனை பயன்படுத்தாமல் திறந்தவெளிப் பகுதிகளை கழிப்பிடமாக பயன்படுத்தினால் சிறுநீர் கழிப்பவருக்கு ரூ.100/-ம் மலம் கழிப்பவருக்கு ரூ.500/-ம் அபராதம் விதிக்கப்படுவதுடன் உரிய நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும், தற்போது ஒவ்வொரு வார்டும் கண்காணிக்கப்படுகிறது. எனவே பொதுமக்கள் பேரூராட்சி நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என இதன் மூலம் அன்புடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தொலைபேசி எண் - 04285 - 290683 அலைபேசி எண் - 89258 09425

வெ.ஆ.எண்.131/செ.ம.தொ.ஆ./2026/ஈரோடு

(ஒம்) செயல் அலுவலர்,
எலத்தூர் பேரூராட்சி, ஈரோடு மாவட்டம்.

ஆவின் ஈரோடு மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,

வாசவி கல்லூரி (அஞ்சல்), ஈரோடு - 638 316.
தொலைபேசி : 8940300366 Email:eroaavin.powder@gmail.com

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

இவ்வொன்றியத்தின் பால் பவுடர் பிரிவில் கீழ்காணும் பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் இ-கொள்முதல் வலைதளம் வழியாக மட்டுமே வரவேற்கப்படுகின்றன.

வ. எண்	பணியின் தன்மை	முன்வைப்புத் தொகை	ஒப்பந்த காலம்
01	30 மெ.டன் பால்பவுடர் ஆலையின் டிரையர் ப்ளாண்ட் ஆலை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கு தினசரி 8 தொழில்நுட்ப பணியாளர்களை வழங்கும் ஒப்பந்த பணி	ரூ.31,500/-	ஒரு வருடம்

மேற்கண்ட பணிக்கு நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் அடங்கிய ஒப்பந்தப்படிவங்களை https://tntenders.gov.in என்ற இ-கொள்முதல் வலைதளத்தில் இருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். முன் ஒப்பந்தப்புள்ளி கூட்டம் நடைபெறும் நாள்:14.05.2026 முற்பகல் 11 மணி. பூர்த்தி செய்யப்பட்ட மின்னணு ஒப்பந்தபுள்ளிகளை https://tntenders.gov.in வலைதள வழியாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள்:26.05.2026 காலை 11.00 மணி வரை. தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் 26.05.2026 முற்பகல் 11.30 மணிக்கு வலைதள வழியாக திறக்கப்படும். தகுதி பெற்ற ஒப்பந்ததாரர் வணிக நுட்ப விலைப்புள்ளி பின்னர் அறிவிக்கப்படும் நாளில் திறவு செய்யப்படும்.

இடம்: ஈரோடு
நாள்: 08.05.2026
வெ.ஆ.எண்.135/செ.ம.தொ.ஆ/2026/ஈரோடு

(ஒம்) பொது மேலாளர்
ஈரோடு மாவட்டக் கூட்டுறவு
பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்

அதிகரட்டி (தேர்வு நிலை) பேரூராட்சி
நீலகிரி மாவட்டம்
தூய்மை இந்தியா இயக்கம்
அறிவிப்பு

மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரத்துறை அமைச்சகம் வகுத்துள்ள நெறிமுறைகளை பின்பற்றி நீலகிரி மாவட்டம் அதிகரட்டி (தேர்வு நிலை) பேரூராட்சியை திறந்தவெளி கழிப்பிடமற்ற OPEN DEFICATION FREE PLUS TOWN (ODF+) பேரூராட்சியாக அறிவித்திட அதிகரட்டி பேரூராட்சி மன்றத்தின் ஒப்புதல் பெற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டம் அதிகரட்டி (தேர்வு நிலை) பேரூராட்சியை திறந்தவெளி கழிப்பிடமற்ற OPEN DEFICATION FREE PLUS TOWN (ODF+) பேரூராட்சியாக அறிவித்திட தங்கள் மேலான கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின், செயல் அலுவலர், அதிகரட்டி பேரூராட்சி, அதிகரட்டி அஞ்சல், நீலகிரி மாவட்டம்-643003. என்ற முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது nlgtpadi@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமாகவோ 18.05.2026 மாலை 6.00 மணிக்குள் தெரிவிக்கலாம் என இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

செயல் அலுவலர்
அதிகரட்டி (தேர்வு நிலை) பேரூராட்சி
அதிகரட்டி, நீலகிரி மாவட்டம்

வெ. ஆ.எண் 32/ செ.ம.தொ.ஆ/ஒ.பு.2026 / நீலகிரி மாவட்டம்

உலிக்கல் (தேர்வு நிலை) பேரூராட்சி
நீலகிரி மாவட்டம்
தூய்மை இந்தியா இயக்கம்
அறிவிப்பு

மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரத்துறை அமைச்சகம் வகுத்துள்ள நெறிமுறைகளை பின்பற்றி நீலகிரி மாவட்டம் உலிக்கல் (தேர்வு நிலை) பேரூராட்சியை திறந்தவெளி கழிப்பிடமற்ற OPEN DEFICATION FREE PLUS TOWN (ODF+) பேரூராட்சியாக அறிவித்திட உலிக்கல் பேரூராட்சி மன்றத்தின் ஒப்புதல் பெற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டம் உலிக்கல் (தேர்வு நிலை) பேரூராட்சியை திறந்தவெளி கழிப்பிடமற்ற OPEN DEFICATION FREE PLUS TOWN (ODF+) பேரூராட்சியாக அறிவித்திட தங்கள் மேலான கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின், செயல் அலுவலர், உலிக்கல் பேரூராட்சி, உலிக்கல் அஞ்சல், நீலகிரி மாவட்டம்- 643102. என்ற முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது nlgtpadi@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமாகவோ 18.05.2026 மாலை 6.00 மணிக்குள் தெரிவிக்கலாம் என இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

செயல் அலுவலர்
உலிக்கல் (தேர்வு நிலை) பேரூராட்சி
உலிக்கல், நீலகிரி மாவட்டம்

வெ. ஆ.எண் 48/ செ.ம.தொ.ஆ/ஒ.பு.2026 / நீலகிரி மாவட்டம்

NAME CHANGE

I, **SANTHA LAKSHMI V** Wife of Matheswaran M, (Date of Birth: 14.06.1954, Place of Birth: Salem) residing at Door No.12/43, Kamaraj Nagar, TVS Nagar, Edayarpalayam, Coimbatore - 641 025, Tamilnadu, India, I have changed my name from **SANTHA LAKSHMI V** to **V SANTHA LAKSHMI** vide Affidavit No. FM 177506 dated 05.05.2026 at Coimbatore

SANTHA LAKSHMI V

NAME CHANGE

I, SATHYANARAYANAN, S/o.Basuviah, born on 04th August 1968 (native distirct: Nilgiris), residing at No: 14/21, West Bury Road, Near Old Post Office, Udhagamandalam. The Nilgiris - 643006. Holder of Indian Passport No:N4857416 issued on 29-12-2015 at coimbatore, state as follow. My Name is misspelled as SATHIYANARAYANAN instead of SATHYANARAYANAN. Hereafter i shall be known as **SATHYANARAYANAN.**

-SATHYANARAYANAN.

திருத்தம்

அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட்.,
CIN : U65999MH2002PLC134884
தி ரூபி, 10ஆவது தளம், 29, சேனாபதி பாபட் மார்க், தாதர் (மேற்கு), மும்பை - 400 028. | www.arcil.co.in

கிளை அலுவலகம் : 1G, 1ஆவது தளம், செஞ்சுரி பிளாசா, எண் 560-562, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600018.

சென்னை & கோயம்புத்தூர் தினமணி தமிழ் பதிப்புகளில் வெளியிடப்பட்ட 08.05.2026 நாளிட்டப்பட்ட மின்-ஏல விற்பனை அறிவிப்பில் இந்தத் திருத்தம் வழங்கப்படுகிறது.

மேற்படி அறிவிப்பில் **பின்வருமாறு திருத்தி வாசித்துக் கொள்ளப்படவேண்டும்** என்பதை தயவுகூர்ந்து கவனத்தில் கொள்ளவும்.

திரு. சிவக்குமார் (கடன்தாரர்) அவர்களுக்கான குறைந்தபட்சக் கேட்பு விலை			
இதற்குப் பதிலாக	ரூ. 3,51,3000 (ரூபாய் மூன்று லட்சத்து ஐம்பத்து ஒராயிரத்து மூன்றாயிரம் மட்டும்)	இப்படி திருத்தி வாசிக்கவும்	ரூ. 35,13,000/- (ரூபாய் முப்பத்து ஐந்து லட்சத்து பதின்மூன்றாயிரம் மட்டும்)

08.05.2026 அன்று வெளியிடப்பட்ட மின் ஏல அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய எந்த விவரங்களிலும் மாற்றம் ஏதும் இல்லை.

ஒம்/-
நாள்: 09.05.2026 அதிகாரப்பூர்வ அலுவலர்
கிளை: கோயம்புத்தூர் / சென்னை அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட்.

MANAPPURAM ASSET FINANCE LTD.

Regd. Office: Door No. III/105, Opp: Nattika Firka Co -Op Rural Bank, Valapad (P O)-680567 Thrissur Dt Kerala CIN : U65921KL1987PLC004810

GOLD AUCTION NOTICE

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கிழ்க்கண்ட கிளைகளில் கீழே குறிப்பிட்டுள்ள தேதிகளில் தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் (www.maafin.in) வெளியிடப்படும். ஏலம் விடப்படாத பொருட்கள் நிறுவனத்தின் இணையதளத்தில் மற்றும் ஏல மையத்தில் விபரங்களை காட்சிக்கு வைத்த பின், தொடரும் அலுவல் நாட்களில் ஏலம் விடப்படும்.

ஏலம் விடப்பட உள்ள பிணையப் பொருட்கள் பட்டியல்படி கீழ்க்கண்ட கிளைகளில் **15-06-2026** தேதியன்று காலை 10 மணி முதல் ஏலம் விடப்படும்.

இடையார்பாளையம் கோயம்புத்தூர்:0431110700017056, 17071

விருப்பமுள்ள ஏலதாரர்கள் ரூ.10,000/- ஏலம் தொடங்கும் நாள் பிணையத்தொகையாக (EMD) ஏலம் தொடங்கும்முன்பு செலுத்த வேண்டும் (ஏலத்தில் வெற்றி பெறாத ஏலதாரர்களுக்கு இந்த தொகை திருப்பி அளிக்கப்படும்). ஏலதாரர்கள் உரிய அடையாள அட்டை/பான் கார்டு கொண்டு வர வேண்டும். கூடுதல் விபரங்களுக்கு தயவுசெய்து தொடர்பு கொள்க 18005729787.

வெளிநீர், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
மணப்புரம் அசட் ஃபைனான்ஸ் லிமிடெட்.

கனரா வங்கி Canara Bank

Syndicate

கடன் வசூல் மேலாண்மைக் கிளை : குஜராத்தி சமாஜ் கட்டிடம், எண்.661-1, மேட்டுப்பாளையம் ரோடு, ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர் - 641 002. போன் எண்.0422 2555655, 2549459, 2558482, மின்னஞ்சல் : cb4712@canarabank.com

அசையாச் சொத்து சுவாதீன அறிவிப்பு

[பிரிவு 13(4)]

பிணைக்காப்பு நிதிச் சொத்து மறு சீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம், 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள் 2002ன் (Securitisation & Reconstruction of Financial Assets & Enforcement of Security Interest Act, 2002 and Security Interest (Enforcement) Rules 2002) கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட **கனரா வங்கி**யின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம் மேற்படி சட்டம் மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள் 2002 பிரிவு 13(12) விதி 3ன் படி, **21.01.2026** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் (Demand Notice) குறிப்பிட்ட கடன் தொகையான **ரூ.2,28,25,559.93 (ரூபாய் இரண்டு கோடியே இருபத்தெட்டு லட்சத்து இருபத்தைந்தாயிரத்து ஐநூற்று ஐம்பத்தொன்பது மற்றும் பைசா தொண்ணூற்று மூன்று மட்டும்)** மற்றும் வட்டி, பிற செலவுகளுடன் அறிவிப்பு பெற்ற தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் திரும்பச் செலுத்த வேண்டுமென்று **கடன்தாரர்கள் : 1. M/s. ட்ர்மோ பம்ப் ஃபேப்ரிகேஷன்ஸ்,** எண்.106/B, டெக்ஸ்டுல் பூங்கா ரோடு அருகில், அப்பா நாயுடு லே அவுட், கணபதி, கோயம்புத்தூர் – 641006. **2.திருமதி. E.மகேஸ்வரி (பங்குதாரர்),** எண்.79, காமதேனுநகர், ஆவாரம்பாளையம், கணபதி, கோயம்புத்தூர் – 641 006. **3. திருமதி.M. அன்னபூரணி (பங்குதாரர்),** எண்.116, காட்டூர் வீதி, பாப்பநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர் – 641 037. **4. திரு.M. இளங்கோ,** எண்.79, காமதேனு நகர், ஆவாரம்பாளையம், கணபதி, கோயம்புத்தூர் – 641006. **5. திருமதி. S. மகேஸ்வரி,** எண்.156/2 B2, கணபதி நகர், ஆசிரியர் காலனி விரிவாக்கம், கணபதி, கோயம்புத்தூர் – 641 006. **6. திரு. ஜெயராம்,** எண்.24, போலீஸ் குவார்டர்ஸ், பாரதி நகர், கணபதி, கோயம்புத்தூர் – 641023 என்பவர்களுக்கு அனுப்பப்பட்டது. கடன்தாரர் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்தத் தவறியதால் குறிப்பாக கடன்தாரருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால் மேற்படி சட்டம் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது மற்றும் 9வது விதியின் படியும் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை **05.05.2026** தேதியில் கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் உடமையாக்கியுள்ளார்/ உடமையாக்க காரணமாக அமைந்தது.

இதுமுதற்கொண்டு கடன்தாரரோ அல்லது மற்ற பொதுமக்களோ இந்தச் சொத்துக்களில் எந்தவித வில்லங்கங்களும் ஏற்படுத்தக் கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது **கனரா வங்கி–க்கு** வந்து சேரவேண்டிய கடன் தொகை **ரூ.2,33,12,173.12 (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்து மூன்று லட்சத்து பன்னிரண்டாயிரத்து நூற்று எழுபத்து மூன்று மற்றும் பைசா பன்னிரண்டு மட்டும்) 31.03.2026** தேதி வரை மற்றும் **01.04.2026** தேதியிலிருந்து பல்வேறு கடன்வசதிகளுடன் மற்றும் வட்டி, பிற செலவுகள் சேர்த்து வசூலிக்கப்படும் என்றும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிணையம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்பதில் கிடைக்கும் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளுமாறு சட்டப்பிரிவு 13(8)ன் நிபந்தனைகளுக்கு கடன் வாங்கியவர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அசையா சொத்தின் விபரம்

சொத்தின் உரிமையாளர் : M/s.ட்ர்மோ பம்ப் ஃபேப்ரிகேஷன்ஸ், பிரதிநிதியாக அதன் பங்குதாரர்கள் திருமதி.E. மகேஸ்வரி (பங்குதாரர்), திருமதி.M. அன்னபூரணி (பங்குதாரர்) : கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், அன்னூர் சார்பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு தாலூகா குன்னத்தூர் கிராமம், பட்டா எண்.941, க.ச.எண் 76ல் உள்ள 3.77 ஏக்கர் விஸ்தீரண நிலத்தில் உட்பிரிவின் படி க.ச.எண் 76/1ல் அடங்கிய 37 சென்ட் நிலமும், கட்டிடமும் சேர்ந்த சொத்தின் **எல்லைகளும், அளவுகளும் வருமாறு :** 25 அடி அகல கிழமேல் பாதைக்குத் தெற்கு, ராம்பால் சவுத்திரிக்குச் சொந்தமான நிலத்துக்கு மேற்கு, சுவாமி நாதனுக்குச் சொந்தமான மீத சொத்துக்கு வடக்கு, 30 அடி அகல தென்வடல் தடத்துக்குக்கிழக்கு இதனுள் பட்ட 37 சென்ட் அல்லது 16,132 ச.அடி விஸ்தீரண நிலமும், அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடமும் அதன் பிற அனைத்து இணைப்புகளும், கிழமேல் வழித்தடத்தை நோக்கிச் செல்லும் தென்வடல் ரோடு, 25 அடி கிழமேல் அகலத் தடம் மற்றும் 30 அடி அகல தென்வடல் தடம் மற்றும் க.ச.எண் 76ல் உள்ள தென்வடல் 30 அடி அகலத்தடம் ஆகியவற்றின் பொது உபயோக உரிமைகளும் சேர்ந்த சொத்து. சொத்து கதவெண் 3/313D, 3/313F மாணிக்கம்பாளையத்தில் வீட்டுவரி விதிப்பு எண்கள் 1430, 1428 ஆகியவற்றுடன் குன்னத்தூர் பஞ்சாயத்து எல்லைக்குள் உள்ளது.

இடம் : கோயம்புத்தூர் அதிகாரபூர்வ அதிகாரி
தேதி : 05.05.2026 கனரா வங்கி

DBS

ஏல அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள எங்கள் வங்கியின் நகைக் கடன் வாடிக்கையாளர்கள், தங்களின் நகைக் கடன் கணக்குகளில் நிர்ணயிக்கப்பட்ட கடன்–மதிப்பு விகிதம் (LTV)–ஐ பராமரிக்கத் தவறியதுடன், மார்ஜின் குறைவு (Margin Shortfall) தொகையையும் ஒழுங்குபடுத்தத் தவறியுள்ளனர். மார்ஜின் குறைவு (Marg